# கல்வி கடன் (விஸ்டம் (அறிவு))

PEOPLE'S BANK
Pride of the Nation

எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் செய்யக்கூடிய மிக முக்கியமான விடயங்களில் ஒன்று தரமான உயர் கல்வியை உறுதிப்படுத்துவது என்பதை நாம் புரிந்து கொண்டுள்ளோம். விஸ்டம் கடன் திட்டம் எமது தேசத்தில் தமது கனவுகளை நனவாக்கிக்கொள்ளுவதற்கு போராடுகின்ற இளைஞ்சர் யுவதிகளுக்கு உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## விஷேட நன்மைகள்

- விஷேட வட்டி வீதங்கள்
- குறைவான ஆவணங்கள்
- இணையதளத்தின் ஊடாக நிகழ்நிலையில் (online)விண்ணப்பிக்கும் வசதி
- 03 வருடங்கள் வரை முதன்மை சலுகைக் காலம்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்காக நிதி சார்ந்த உதவிகளை வழங்குதல்
- உள்நாட்டு பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி நடவடிக்கைகளுக்காக பாட கட்டணங்களுக்கு 100% நிதி வழங்க முடியும்.

## தகுதி அளவுகோல்கள்

- மீளச் செலுத்தும் திறன் உள்ள/ திறன் இல்லாத மாணவர்கள்.
- திருப்திகரமான மீளச் செலுத்தும் திறன் உள்ள பெற்றோர்/வாழ்க்கைத் துணை/நெருங்கிய உறவினர் ஆகியோருடன் இணைத்து கடன் வசதி கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.
- கடன் பெறுபவர் மற்றும் இணை-கடன் பெறுபவர் 18 - 70 வயதுக்கு இடைப்பட்ட வயதுடைய இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

## ஏற்புடையதான வட்டி வீதம்

www.peoplesbank.lk என்ற மக்கள் வங்கி இணையத்தளத்தைப் பார்க்கவும்.

## உடன்படிக்கை காலம்

ஆகக் கூடிய மீளச் செலுத்தும் காலம் 07 வருடங்களாகும். இது ஓய்வுபெறும் காலம், விரிவான மதிப்பீடு மற்றும் வழங்கப்படும இணை ஈடு என்பவற்றிற்கு ஏற்ப மாறுபடும்.

## கட்டணங்கள்/விதிப்பனவுகள், தரகு, வட்டி போன்றவை.

- நிலையான/மாறுபடக் கூடிய வட்டி வீதங்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிலையான மற்றும் மாறுபடக்கூடிய வீதங்கள்
- தவணை கடந்த மூலதனத்தின் மீது அபராத வட்டி
- தவணை கடக்கும் தவணைப் பணத்திற்கு அபராதம்
- வழக்கத்தில் உள்ள ஆவணப்படுத்தல் விதிப்பனவுகள்
- வழக்கத்தில் உள்ள முற்கூட்டியே கடனை செலுத்தி தீர்க்கும் கட்டணங்கள்.
- மதிப்பீட்டு கட்டணங்கள். (ஏற்புடையதானால்)
- சட்ட கட்டணங்கள். (ஏற்புடையதானால்)
- முத்திரை வரி. (ஏற்புடையதானால்)
- காப்புறுதி காப்பீட்டு கட்டணத் தொகை (ஏற்புடையதானால்)

## விண்ணப்ப அளவுகோல்

- www.peoplesbank.lkஇற்கு விஜயம் செய்து நிகழ்நிலையில் (online) விண்ணப்பிக்கவும்
- மாணவர் தொழில் புரிபவராக இருந்தால் 03 மாத சம்பள பதிவேடுகள் மற்றும் இணை- கடன் பெறுபவரின் சம்பள பட்டியல் என்பவற்றுடன் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கிளைக்கு அல்லது சேவை நிலையத்திற்கு விஜயம் செய்யவும் அல்லது அழைப்பை ஏற்படுத்தவும்

## முக்கியமான நியதிகளும் நிபந்தனைகளும்

- இலங்கை ரூபாவில் (LKR) மாத்திரம் வசதிகளை கவனத்தில் எடுத்துக்கொள்ள முடியும்.
- சம்பளத்தை / கடன் தவணைப் பணத்தை மக்கள் வங்கியில் பேணப்படும் கணக்கிற்கு மாற்றுவதற்குப் பொறுப்பேற்கும் கடிதத்தை தொழில் தருநரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.
- ஏற்றுக்கொள்ளக்கூடிய CRIB அறிக்கை
- முன்மொழியப்பட்ட கடன் தவணைப் பணம் மற்றும் ஏற்கனவே இருக்கின்ற கழிவுகள்/கடன் பொறுப்புக்கள் தேறிய சம்பளத்தில் 60%இற்குள் இருக்க வேண்டும்.
- சம்பளம் பெறும் கடன் பெறுபவர்கள் மீளச் செலுத்தும் காலம் ஓய்வுபெறும் வயது வரை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

## முறைப்பாட்டைக் கையாளும் நடைமுறை

- கடன் பெறுபவர் info@peoplesbank.lkஇன் ஊடாக எங்களை அணுக முடியும்
- சம்பந்தப்பட்ட கிளைக்கு, பிராந்திய தலைமை அலுவலகத்திற்கு அல்லது தலைமை அலுவலகத்திற்கு எழுத்து மூலம் கோரிக்கையைச் சமர்ப்பிக்கவும்.
- சம்பந்தப்பட்ட கிளையை, பிராந்திய தலைமை அலுவலகத்தை அல்லது தலைமை அலுவலகத்தை அழைக்கவும்

## மேலதிக தகவல்களுக்கு

- www.peoplesbank.lk விஜயம் செய்யவும்.
- அழைப்பு நிலையம் - 1961
- தலைமை அலுவலகம் - 0112481481